සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

සාමාන්‍ය පොදු පරීක්ෂණය பொதுச் சாதாரணப் பரீட்சை Common General Test	12 T	පැය දෙකයි இரண்டு மணித்தியாலம் *Two hours*

අறிவுறுத்தல்கள் :

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **கணிப்பான்களைப் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது.**
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.**

1. இலங்கையுடனான உற்பத்தி ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் தொழினுட்ப ஒத்துழைப்பு என்பவற்றை ஊக்குவிப்பதனை நோக்காகக் கொண்டு பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் 2026 மே மாதத்தில் எந்த நாட்டின் ஜனாதிபதி இலங்கைக்கு வருகை தந்தார்?
(1) மாலைதீவு (2) ஈரான் (3) யப்பான் (4) வியட்நாம் (5) இந்தியா

2. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (EDB) தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டு இந்நாட்டுக்கு மிகக் கூடுதலான மொத்த ஏற்றுமதி வருமானத்தைக் கொடுத்த துறை எது?
(1) தேயிலை
(2) தெங்கு சார்ந்த உற்பத்திகள்
(3) ஆடைகள் மற்றும் புடவைகள்
(4) வாசனைத் திரவியங்கள் மற்றும் அத்தியாவசிய எண்ணெய்கள்
(5) வைரம், இரத்தினக் கற்கள், ஆபரணங்கள்

3. தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் அண்மையில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட குடித்தொகை மற்றும் வீடமைப்பு தொகை மதிப்பீட்டின்படி இலங்கையின் மிகக் கூடுதலான சனத்தொகையைக் கொண்ட மாவட்டம்
(1) கொழும்பு (2) கம்பஹா (3) குருநாகல் (4) கண்டி (5) களுத்துறை

4. 2026 இல் மிகச் சிறந்த திரைப்படத்துக்கான ஒஸ்கார் விருதினைப் பெற்ற திரைப்படம் எது?
(1) One Battle After Another (2) The Secret Agent (3) Bugonia
(4) Frankenstein (5) Sentimental Value

5. 2026 யூன் மாதத்தில் தனது போட்டிப் பிரிவின் தரப்படுத்தலில் உலகில் மிகச் சிறந்த விளையாட்டு வீர்களுள் இரண்டாம் இடத்தைப் பெற்று ருமேஷ் தரங்க இலங்கைக்கு நற்பெயரை ஈட்டித்தந்தார். அவரது விளையாட்டு நிகழ்ச்சி எது?
(1) ஈட்டி எறிதல் (2) தட்டெறிதல்
(3) குண்டெறிதல் (4) உயரம் பாய்தல்
(5) கோலூன்றிப் பாய்தல்

6. 2026 பெப்ரவரி 04 இல் இலங்கையின் 78 ஆவது தேசிய சுதந்திர தின விழாவுக்கான கருப்பொருள் யாது?
(1) Let's Build a New Country - புதிய நாட்டினைக் கட்டியெழுப்புவோம்
(2) Towards a National Renaissance - தேசிய மறுமலர்ச்சியை நோக்கி
(3) Rebuilding Sri Lanka - இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்
(4) A Step Towards a Flourishing Country - செழிப்பான நாட்டை நோக்கிய ஒரு படி
(5) Secure Nation - A Prosperous Country - பாதுகாப்பான நாடு - வளமான ஒரு நாடு

[பக். 2 ஐப் பார்க்க

CamScanner

7. உலகின் தினசரி கனியநெய் போக்குவரத்தின் ஏறத்தாழ 20% ஹோர்மூஸ் நீரிணையின் ஊடாக இடம்பெறுவதால், இது புவியின் முக்கியமான ஒரு நீரிணையாகக் கருதப்படுகின்றது. ஹோர்மூஸ் நீரிணை எந்த இரண்டு நாடுகளுக்கு இடையே அமைந்துள்ளது?
(1) ஈரான், இஸ்ரேல் (2) ஓமான், ஈரான்
(3) ஓமான், பாகிஸ்தான் (4) ஈரான், குவைத்
(5) ஈரான், பாகிஸ்தான்

8. விரிவான ஆராய்ச்சி மற்றும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, 'என்ரோமிக்ஸ்' எனும் mRNA புற்றுநோய் தடுப்பு மருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த தடுப்பு மருந்து புற்றுநோய்களுக்கான சிகிச்சையில் ஒரு புதிய திருப்பமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த தடுப்பு மருந்தை உற்பத்தி செய்த நாடு எது?
(1) சீனா (2) ஜேர்மனி (3) அவுஸ்திரேலியா
(4) ஜப்பான் (5) ரஷ்யா

9. பின்வரும் நாடுகளில் 2026 FIFA உலகக் கிண்ணத்துக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் முதலிடத்தை வெற்றிகொண்ட நாடு எது?
(1) இங்கிலாந்து (2) பிரான்ஸ் (3) ஸ்பெயின் (4) நோர்வே (5) ஆஜென்ரீனா

10. 2025 ஆம் ஆண்டு உலக சுற்றுச் சூழல் தினத்தின் முக்கிய கருப்பொருள் பின்வருவனவற்றுள் எது?
(1) For Life on Earth - உயிர் வாழ்வதற்காகப் புவி
(2) Ecosystem Restoration - சூழல்தொகுதிகளை மீளக்கட்டியெழுப்புதல்
(3) Protection of Wetlands - ஈர நிலங்களைக் காப்போம்
(4) Beat Plastic Pollution - நெகிழி மாசுபாட்டைத் தடுப்போம்
(5) Time for Nature - இயற்கைக்கான நேரம்

- இல. 11, 12 ஆகிய வினாக்களுக்குரிய இரண்டு குடும்பங்களின் உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
இந்த குடும்ப உறுப்பினர்களிடையே காணப்படும் தொடர்புகள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

குடும்ப உறுப்பினர்	ஆண் / பெண்	வாழ்க்கைத் துணை (திருமணமாகியிருப்பின்)	சகோதரன்/ர்	சகோதரி/யர்
A	ஆண்	B	E, H	F, G
B	பெண்	A	C	D
C	ஆண்	G	இல்லை	B, D
D	பெண்	பொருத்தமற்றது	C	B
E	ஆண்	பொருத்தமற்றது	A, H	F, G
F	பெண்	பொருத்தமற்றது	A, E, H	G
G	பெண்	C	A, E, H	F
H	ஆண்	பொருத்தமற்றது	A, E	F, G

கீழே தரப்பட்டுள்ள வரையறைகளை **மாத்திரம்** பயன்படுத்துக.
* ஒருவரது வாழ்க்கைத்துணையின் சகோதரர்கள் அவனது / அவளது மைத்துனர் எனப்படுகின்றனர்.
* ஒருவரது சகோதரிகளினது வாழ்க்கைத்துணையினர், அவனது / அவளது மைத்துனர் எனப்படுகின்றனர்.
* ஒருவரது வாழ்க்கைத்துணையின் சகோதரிகள் அவனது / அவளது மைத்துனிகள் எனப்படுகின்றனர்.
* ஒருவரது சகோதரர்களின் வாழ்க்கைத்துணையினர் அவரது / அவளது மைத்துனிகள் எனப்படுகின்றனர்.

11. A இற்கு இருக்கும் மைத்துனர்கள் எண்ணிக்கையும் மைத்துனிகள் எண்ணிக்கையும் முறையே
(1) 1 உம் 1 உம் ஆகும். (2) 1 உம் 2 உம் ஆகும்.
(3) 1 உம் 3 உம் ஆகும். (4) 2 உம் 1 உம் ஆகும்.
(5) 2 உம் 2 உம் ஆகும்.

12. G இற்கு இருக்கும் மைத்துனர்கள் எண்ணிக்கையும் மைத்துனிகள் எண்ணிக்கையும் முறையே
(1) 0 உம் 1 உம் ஆகும். (2) 0 உம் 2 உம் ஆகும்.
(3) 1 உம் 1 உம் ஆகும். (4) 1 உம் 2 உம் ஆகும்.
(5) 2 உம் 2 உம் ஆகும்.

[பக். 3 ஐப் பார்க்க

CamScanner

13. நியூட்டனின் சகோதரியான கிளேரா நியூட்டனிலும் நான்கு வருடங்கள் இளையவர். கிளேராவின் வயது 25 வருடங்கள் ஆக இருக்கும்போது அவளது மகள் ரீட்டா பிறந்தாள். 2026 இல் ரீட்டாவின் வயது 22 வருடங்கள் ஆயின், நியூட்டன் பிறந்த ஆண்டு எது?


(1) 1970 (2) 1973 (3) 1975 (4) 1981 (5) 1985

14. P நகர பஸ் நிலையத்திலிருந்து மு.ப. 7.00 மணிக்கு பயணத்தைத் தொடங்கிய நீண்ட தூர சேவை பஸ் வண்டி ஒன்று மணிக்கு 60 கிலோமீற்றர் சராசரி கதியில், P நகரத்திலிருந்து 50 km தூரத்தில் அமைந்துள்ள முதலாவது பஸ் தரிப்பிடமாகிய Q நகரத்தை நோக்கிப் பயணிக்கிறது.

மேற்படி பஸ் வண்டியை Q தரிப்பிடத்தில் பிடிக்கும் நோக்கத்துடன் ஒரு தந்தையும் அவரது மகளும் மோட்டார் சைக்கிளில் பயணிக்கின்றனர். அவர்களது வீடு Q இலிருந்து 15 km தூரத்தில் அமைந்துள்ளதோடு அவர் தமது மோட்டர் சைக்கிளை மணிக்கு 45 கிலோமீற்றர் சராசரிக் கதியில் செலுத்துகின்றார். பஸ் வண்டி வந்தடைய 15 நிமிடங்களுக்கு முன்னதாக Q இனை அடைய அவர்கள் எதிர்பார்க்கின்றனர் எனின், அவர்கள், தமது வீட்டிலிருந்து புறப்பட வேண்டிய நேரம் யாது?

(1) மு.ப. 7.10 (2) மு.ப. 7.15 (3) மு.ப. 7.25 (4) மு.ப. 7.40 (5) மு.ப. 7.50

15. படத்தில் காட்டியுள்ளவாறு கட்டடமொன்றின் செவ்வக வடிவக் கூரையொன்று அலகொன்று 40 cm × 20 cm அளவான கூரை ஓடுகளாலும், அக்கூரையின் மத்தியில் அமைந்துள்ள ஒரு பக்க நீளம் 4 m கொண்ட தடித்த ஊடுகாட்டும் தன்மையுள்ள சதுர பிளாஷ்ரிக் தகட்டினாலும் (ஒளியூட்டத்துக்காக) அமைக்கப்பட்டுள்ளது.



ஒரு கூரை ஓட்டின் விலை ரூ. 320 உம், பிளாஷ்ரிக் தகடு ஒரு சதுர மீற்றரின் விலை ரூ. 1 500 உம் ஆகும். கூரை ஓடுகளுக்கும் பிளாஷ்ரிக் தகடுகளுக்குமான மொத்தச் செலவு எத்தனை ரூபாய்களாகும்?

(1) 240 000 (2) 704 000 (3) 728 000
(4) 768 000 (5) 792 000

16. குடும்ப சுகாதாரக் காப்புறுதித் திட்டமொன்று தொடர்பான விவரங்கள் பின்வருமாறு:

காப்பீட்டு நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, 16 வயதுக்குக் குறைந்த 3 பிள்ளைகள், பெற்றார் இருவருக்கும் வருடாந்த கட்டுப்பணம் ரூ. 0.5 மில்லியனும் மேலும் 16 வயதுக்குக் குறைந்த மேலதிக பிள்ளை ஒவ்வொருவருக்கும் ரூ. 100 000 வீதமும் வழங்கப்பட வேண்டும்.

3, 7, 10, 13 வருட வயதான நான்கு பிள்ளைகளும் பெற்றார் இருவரும் அடங்கிய ஒரு குடும்பத்தின் ஓர் ஆண்டுக்குரிய காப்புறுதிப் பணம் எத்தனை மில்லியன் ரூபாய் ஆகும்?

(1) 0.51 (2) 0.55 (3) 0.56 (4) 0.60 (5) 0.65

- இல. **17**, **18** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு குறித்த தினத்தில் மொத்த விற்பனையாளர் ஒருவரிடத்தில் இங்கு அட்டவணையில் காட்டியுள்ளவாறான காய்கறிகள் கையிருப்பில் உள்ளன.

காய்கறி வகைகள்	கையிருப்பு (kg)	தொடக்க விலை 1 கிலோகிராமுக்கு (ரூ)
பீற்றூட்	900	120
நோக்கோல்	600	105
முள்ளங்கி	800	95
கரட்	700	160

வியாபாரிக்கு இந்தக் கையிருப்பை விற்பனை செய்வதற்கு இரண்டு தெரிவுகள் உள்ளன.

(a) முழுக் கையிருப்பையும் 16% கழிவுடன் உடனடியாகவே விற்பனை செய்தல்

(b) எல்லாக் காய்கறிகளையும் இரண்டு நாட்களுக்குள் தொடக்க விலையில் சில்லறையாக விற்பனை செய்தல்

17. வியாபாரிக்கு (a) தெரிவின் கீழ் கிடைக்கும் மொத்த வருமானம் எவ்வளவு?

(1) ரூ. 290 450 (2) ரூ. 300 500 (3) ரூ. 301 560 (4) ரூ. 307 560 (5) ரூ. 359 000

18. வியாபாரிக்கு (a) தெரிவின் மூலம் கிடைக்கும் வருமானத்தை விட (b) தெரிவில் கிடைக்கும் வருமானம் எவ்வளவு அதிகமாகும்?

(1) ரூ. 54 712 (2) ரூ. 56 512 (3) ரூ. 57 000 (4) ரூ. 57 440 (5) ரூ. 60 000

036395

02030000820111395

CamScanner

19. பர்னாந்து என்பவர் மூன்று வருடங்களுக்காக ரூ. 10 மில்லியன் பணத்தை நிலையான வைப்பில் முதலீடு செய்கிறார். வட்டி வீதத்தை அவர் பின்வரும் ஏதாவது இரண்டு தெரிவுகளிலிருந்து தெரிவு செய்யலாம்.

* முதிர்ச்சியின் போது 13% வருடாந்த வட்டி வீதம் (வருடாந்த வட்டியினையும் சேர்த்து)
* 12% வருடாந்த வட்டி வீதத்தின் கீழ் மாதாந்த வட்டி

மேற்படி இரண்டு தெரிவுகளுக்கு இடையில் மூன்று ஆண்டுகளுக்காக கிடைக்கும் வட்டி வருமானத்தின் வித்தியாசம் எவ்வளவு?

(1) ரூ. 700 000 (2) ரூ. 750 000 (3) ரூ. 778 000 (4) ரூ. 818 970 (5) ரூ. 828 970

20. அன்னாசிப்பழச் சுவையுள்ள ஒரு வகை ஐஸ்கிறீமில் பால்கிறீமுக்கும் அன்னாசிக்கும் இடையிலான நிறை விகிதம் 4:1 ஆகும். ஒரு கிலோகிராம் பால்கிறீமின் உற்பத்திச் செலவு ரூ. 750 ஆவதோடு ஒரு கிலோகிராம் அன்னாசியின் உற்பத்திச் செலவு ரூ. 600 ஆகும். அன்னாசிச் சுவையுள்ள 500 கிராம் ஐஸ்கிறீமின் உற்பத்திச் செலவு எவ்வளவு?

(1) ரூ. 360 (2) ரூ. 380 (3) ரூ. 400 (4) ரூ. 420 (5) ரூ. 450

21. ஒரு குடும்பத்தில் தந்தை தனது மகளுக்கு ரூ. 8 மில்லியன் பெறுமதியான ஒரு காணியையும் மகனுக்கு ரூ. 11 மில்லியன் பெறுமதியான ஒரு வீட்டையும் பெற்றுக் கொடுத்தார். அக்குடும்பத்தின் தாய், தனது மகளுக்கு ரூ. 6 மில்லியன் பெறுமதியான தங்க நகைகளையும், மகனுக்கு ரூ. 5 மில்லியன் பெறுமதியான மோட்டர் வாகனத்தையும் பெற்றுக் கொடுத்தார். மகனுக்கும் மகளுக்கும் கிடைத்த சொத்துக்களின் பெறுமதிகளுக்கு இடையிலான விகிதம் யாது?

(1) 3 : 1 (2) 4 : 1 (3) 5 : 7 (4) 7 : 8 (5) 8 : 7

- இல. **22** தொடக்கம் **24** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

கற்பனையான ஒரு கோளில் ஒரு சூரியனும் ஆமைச்சந்திரன், குதிரைச்சந்திரன் எனப்படும் இரண்டு சந்திரன்களும் உதிக்கின்றன. இக்கோள்கள் சூரியனைச் சுற்றிச் செல்வதற்கு சரியாக 200 நாட்கள் எடுப்பதோடு கோளைச் சுற்றிச் செல்வதற்கு ஆமைச்சந்திரனுக்கு 30 நாட்களும், குதிரைச் சந்திரனுக்கு 12 நாட்களும் எடுக்கின்றன. இரண்டு பூரணச் சந்திரன்கள் ஒரே நேரத்தில் வானில் உதிக்கும்போது அதனை மகா சந்திர இரவு எனவும், ஒரு பூரணச் சந்திரன் மாத்திரம் வானில் உதிக்கும் போது அதனை சிறு சந்திர இரவு எனவும் அக்கோளில் வாழும் மக்கள் அழைக்கின்றனர்.

22. இரண்டு மகா சந்திர இரவுகளுக்கு இடையே எத்தனை சிறு சந்திர இரவுகள் தோன்றும்?

(1) 2 (2) 3 (3) 4 (4) 5 (5) 6

23. கடந்த வருடத்தில் மகா சந்திர இரவுகள் நான்கு இருந்தனவாயின், இந்த வருடத்தில் அவ்வாறான இரவுகள் எத்தனை இருக்கும்?

(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

24. மேற்படி கோள் தொடர்பில் பின்வரும் எந்தக் கூற்று **உண்மையற்றது**?

(1) பூரண அமாவாசை இரவொன்று ஒருபோதும் கிடையாது.
(2) குதிரைச் சந்திரன் அமாவாசையாகும் போது சிறு சந்திர இரவொன்று உண்டு.
(3) இரண்டு சரிபாதிச் சந்திரன்கள் உதித்த இரவொன்று ஒருபோதும் கிடையாது. .
(4) ஆமைச்சந்திரன் சரிபாதிச் சந்திரனாகத் தோன்றும் ஓர் இரவில் குதிரைச்சந்திரன் அமாவாசையாக அமைந்திருக்கும்.
(5) குதிரைச்சந்திரன் சரிபாதிச் சந்திரனாகத் தோன்றும் ஓர் இரவில் ஆமைச்சந்திரன் அமாவாசையாக இருக்கும்.

CamScanner

036395

● இல. **25** தொடக்கம் **27** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

பார்பிலோனியா எனும் ஒரு கற்பனையான நாகரீகத்தைச் சேர்ந்த மக்களுக்கு, அவர்களுக்கேயுரிய எண்கள் காணப்பட்டதோடு, கூட்டலுக்காகவும் பெருக்கலுக்காகவும் அவர்கள் பயன்படுத்திய குறியீடுகள் முறையே + உம் × உம் ஆகும். பார்பிலோனியர்கள், வெவ்வேறு எண்களையும் (n) அவற்றை மூன்றாம் அடுக்குக்கு ஏற்றுவதால் கிடைக்கும் எண்களையும் (3^n) உள்ளடக்கித் தயாரித்த ஓர் அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது.

n	@	#	@ #	@ $	@ @ $	@ # $
3^n	%	^	&	*	*	{

25. பார்பிலோனியர் % எனும் குறியீட்டினால் காட்டியுள்ள எண் யாது?

(1) 0 (2) 1 (3) 3 (4) 9 (5) 27


26. ஒரே எண்ணைக் குறிக்கும் இரண்டு குறியீடுகள் எவை?

(1) %, $ (2) &, * (3) $, * (4) {, % (5) ^, &


27. பார்பிலோனிய குறியீடுகளுள் ^ × * என்பது பின்வரும் எதற்குச் சமமானது?


(1) { (2) & (3) % + * (4) ^ + { (5) & × %

28. நியமமான தாயக்கட்டையொன்றின் முகப்புகளில் உள்ள குத்துக் கோலங்கள் கீழே காட்டப்பட்டுள்ள உருவங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.



வலது பக்கத்தில் உள்ள உருவில், சில பக்கங்களில் காட்டப்பட்டுள்ளவாறான குத்துக்கள் உள்ள தாயக்கட்டை அடுக்கொன்று காட்டப்பட்டுள்ளது. தாயக்கட்டை நான்கினது ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருக்கும் முகப்புகள் இரண்டிலும், ஒரே எண்ணிக்கையான குத்துக்களே உள்ளன. அதற்கமைய தாயக்கட்டை அடுக்கில் வலது பக்கத்தில் உள்ள பக்கத் தோற்றத்தைக் காட்டும் உரு பின்வருவனவற்றுள் எது?





(1) (2) (3) (4) (5)

● இல. **29** தொடக்கம் **31** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

பூங்காவொன்றில் நடந்து செல்வோருக்காக அமைக்கப்பட்ட நேர்கோட்டு நடைபாதையொன்றும், சைக்கிளில் செல்வோருக்காக அந்நேர்கோட்டுப் பாதையை விட்டமாகக் கொண்ட வட்டப்பாதையொன்றும் உள்ளன. உடற்பயிற்சி செய்வதற்காக சைக்கிளில் வந்த ஒருவரும் நடந்துவந்த ஒருவரும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்து, சீரான கதியில் தத்தமது பாதையில் பயணிக்கின்றனர். நடந்து செல்பவர் பாதையில் ஒரு தடவை முன்னோக்கி நேராக நடந்து சென்று மீண்டும் தாம் பயணத்தை ஆரம்பித்த இடத்தை வந்தடைந்த போது, சைக்கிளில் செல்பவர் இரண்டரைச் சுற்றுக்கள் சென்றிருந்தார்.

29. நடந்துசெல்பவர் தமது பாதையில் பாதித் தூரம் நடந்து சென்றுள்ளபோது சைக்கிளில் செல்பவர் எத்தனை சுற்றுக்கள் சென்றிருப்பார்?

(1) 5/8 (2) 2/3 (3) 5/6 (4) 9/7 (5) 4

30. இவர்கள் இருவரும் முதல் தடவையாக ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது நடந்து செல்பவர் நேரிய பாதையின் தூரத்தை எத்தனை தடவைகள் நடந்து சென்றிருப்பார்?

(1) 2 (2) 3 (3) 4 (4) 5 (5) 6

0103000082011139 5

[பக். 6 ஐப் பார்க்க

CamScanner

31. பயணத்தைத் தொடங்கிய பின்னர் ஒருவரை ஒருவர் முதல் தடவையாக சந்திக்க முன்னர் எத்தனை தடவைகள், அவர்கள் இருவருக்கும் இடையிலான தூரம், நேர்கோட்டுப்பாதையின் மொத்தத் தூரத்திற்குச் சமமாக இருக்கும்?

(1) 0 (2) 1 (3) 2 (4) 3 (5) 4

● இல. **32** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

நீண்ட காலத்தின் பின்னர் இசை நிகழ்ச்சியொன்றில் சந்தித்துக்கொண்ட திலகா, சுமனா, சீலா, மெனிக்கா ஆகிய நான்கு பழைய தோழிகளுக்கு இடையே பின்வரும் ஓர் உரையாடல் இடம்பெற்றது.

திலகா : சுமனா, நீங்கள் எனக்கு ஓர் அக்கா அல்லவா.

சுமனா : என்ன சொல்கிறீர்கள் திலகா? நீங்கள், சீலா ஆகிய இருவரும் என்னை விட மூத்தவர்கள்.

சீலா : சரி... சரி... என்னை விட இளையவராக இங்கு இருப்பவர் மெனிக்கா மாத்திரம் தான்.

மெனிக்கா: உண்மைதான். இங்கு என்னை விட இளையவர் ஒருவர்தான் இருக்கிறார்.

32. இங்கு உண்மை கூறுபவர்கள் உச்ச அளவாக எத்தனை பேர்?

(1) 0 (2) 1 (3) 2 (4) 3 (5) 4

33. சுமனாவும் மெனிக்காவும் உண்மை கூறுபவர்களெனின், மிக இளையவரான தோழி யார்?

(1) மெனிக்கா (2) திலகா (3) சீலா
(4) சுமனா (5) விடையளிக்க தரவு போதாது

34. திலகாவும் மெனிக்காவும் உண்மை கூறுபவர்களெனின், ஒரு போதும் சம வயதுடையவர்களாக இருக்க **முடியாதோர்**

(1) திலகாவும் சீலாவும் (2) திலகாவும் மெனிக்காவும்
(3) சுமனாவும் சீலாவும் (4) மெனிக்காவும் சீலாவும்
(5) மெனிக்காவும் சுமனாவும்

35. திலகாவும் சீலாவும் உண்மை கூறுபவர்கள் எனின், சமவயதுடையோர்களாக இருக்கக்கூடியோர் யாவர்?

(1) திலகாவும் சீலாவும் மாத்திரம்
(2) மெனிக்காவும் சுமனாவும் மாத்திரம்
(3) திலகாவும் சுமனாவும் மாத்திரம்
(4) மெனிக்காவும் சுமனாவும் சீலாவும் மாத்திரம்
(5) சீலாவும் திலகாவும் மெனிக்காவும் மாத்திரம்

36. பின்வரும் நிகழ்வுகளில், நிச்சயமாக நிகழுகின்றது எனின் (A) எனவும், பெருமளவுக்கு நிகழ இடமுள்ளது எனின் (B) எனவும், நிகழ இடமுள்ளது எனின் (C) எனவும், நிகழுவது சிரமமானது எனின் (D) எனவும், ஒருபோதும் நிகழாதது எனின் (E) எனவும் முறையாக வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

* ஒரு பொலிவுட் நடிகன் விரும்பும் இரண்டு விளையாட்டு வீராங்கனைகள் இந்திய வலைப்பந்து அணியில் உள்ளனர்.
* ஒரே எண்ணிக்கையான தலைமயிர்களைத் தமது தலையில் கொண்ட இரண்டு விளையாட்டு வீரர்கள் உஸ்பெக்கிஸ்தான் உதைபந்தாட்ட அணியில் உள்ளனர்.
* ஒரே மாகாணத்திலிருந்து வந்த இரண்டு விளையாட்டு வீரர்கள் இலங்கைக் கிரிக்கெட் அணியில் உள்ளனர்.
* ஒரே இலக்க வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளைக் கொண்ட இரண்டு விளையாட்டு வீரர்கள் ரூமேனிய வலைப்பந்தாட்ட அணியில் உள்ளனர்.
* ஒரே தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும் இரண்டு விளையாட்டு வீராங்கனைகள் ரஷ்ய நாட்டு மகளிர் கைப்பந்து அணியில் உள்ளனர்.

(1) *A, D, B, E, C* (2) *B, A, C, D, E* (3) *B, A, D, E, C* (4) *B, D, A, E, C* (5) *C, B, D, A, C*

CamScanner

● இல. **37** தொடக்கம் **39** வரையிலான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

A, B, C, D, E, F என அழைக்கப்படுகின்ற ஆறு நண்பர்கள் அறுகோண மேசையொன்றினைச் சூழ அதன் மத்தியை நோக்கியவாறு அமர்ந்துள்ளனர். அவர்களுள் A, E, F ஆகியோர் ஆண் பிள்ளைகள் ஆவதோடு B, C, D ஆகியோர் பெண் பிள்ளைகள் ஆவர். அவர்கள் பின்வருமாறு அமர்ந்துள்ளனர்.

* C யை நோக்கியவாறு E அமர்ந்துள்ளார்.

* B இன் அருகே இரு புறங்களிலும் அமர்ந்திருப்போர் E, F ஆகியோர் ஆவர்.

* ஒவ்வோர் ஆண் பிள்ளையும் பெண் பிள்ளையொருவரை நோக்கியவாறு அமர்ந்துள்ளனர்.

37. A இற்கு நிலையான இருக்கையொன்று ஒதுக்கப்பட்டிருப்பின் மேலும் ஏனைய நண்பர்கள் மேசையைச் சூழ அமரக் கூடிய ஒன்றுக்கொன்று வேறுபட்ட வழிகள் எத்தனை உள்ளன?

(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5


38. பின்வரும் கூற்றுகளுள் சரியான கூற்று எது?

(1) B இனை நோக்கியவாறு A அமர்ந்துள்ளார்.
(2) C இனை நோக்கியவாறு A அமர்ந்துள்ளார்.
(3) D இனை நோக்கியவாறு A அமர்ந்துள்ளார்.
(4) E இனை நோக்கியவாறு B அமர்ந்துள்ளார்.
(5) F இனை நோக்கியவாறு B அமர்ந்துள்ளார்.

39. நண்பர்கள் அறுவரும் அமர்ந்திருக்கும் வட்டத்தின் சரியான ஒழுங்குமுறையைக் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?


(1) A, B, E, C, F, D (2) A, B, E, F, C, D (3) A, C, E, F, B, D
(4) A, C, F, E, B, D (5) A, D, E, B, F, C

40. நிலைக்குத்தாக நிறுத்தப்பட்டுள்ள தளவாடி ஒன்றின் முன்னே படத்தில் காட்டப்பட்டவாறு ஒரு மனிதன் நிற்கிறார். அம்மனிதனின் உயரம் h எனக் கருதுவோம். அம்மனிதனுக்கு தளவாடியின் ஊடாக தமது முழு விம்பத்தைப் பார்க்கக்கூடியவாறாக இருப்பதற்கு தளவாடியின் குறைந்தபட்ச உயரம் l ஆக இருக்க வேண்டும் எனக் கருதுவோம். அப்போது பின்வரும் எந்தத் தொடர்பு சரியானது?




(1) $l > h$ (2) $l = h$
(3) $h > l > h/2$ (4) $l = h/2$
(5) $h/2 > l$

● இல. **41, 42** ஆகிய வினாக்கள் பின்வரும் வட்ட வரைபுகளில் காட்டப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.



உரு 01 : A, B, C, D, E ஆகிய ஐந்து நிலையங்களில் தெரிவு செய்தலுக்கான பரீட்சைக்குத் **தோற்றிய** விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை



உரு 02 : A, B, C, D, E நிலையங்களில் **சித்தியடைந்த** விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை

41. A, B, C, D, E ஆகிய ஐந்து நிலையங்களிலும் பரீட்சைக்குத் தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 1000 எனின், நிலையம் A இல் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(1) 72 (2) 90 (3) 100 (4) 108 (5) 120

42. நிலையம் A இல் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் அனைவரும் அதில் சித்தியடைந்தனர் எனின், பரீட்சைக்குத் தோற்றிய மொத்தப் பரீட்சார்த்திகளுள் எத்தனை சதவீதமானோர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்?

(1) 72% (2) 80% (3) 81% (4) 90% (5) 100%


[பக். 8 ஐப் பார்க்க

CamScanner

● இல. **43, 44** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களையும் வெண்ரிப் படத்தையும் அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு குறித்த பாடசாலையில் க. பொ. த. (உயர் தர) விஞ்ஞான பாடத்துறையில் பயிலும் மூன்று மாணவ குழுக்கள் உள்ளன. அவையாவன,

1. இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் பயிலும் மாணவர்கள் (பௌதிக விஞ்ஞானம்)
2. உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் பயிலும் மாணவர்கள் (உயிரியல் விஞ்ஞானம்)
3. உயிரியல், விவசாயம், இரசாயனவியல் பயிலும் மாணவர்கள் (விவசாய விஞ்ஞானம்)



க. பொ. த. (உயர் தர) விஞ்ஞான பாடத்துறையில் பயிலும் மாணவர்கள்

43. எத்தனை மாணவர்கள் பௌதிக விஞ்ஞானம் பயிலுகின்றனர்?
(1) 40 (2) 60 (3) 80 (4) 100 (5) 120

44. எத்தனை மாணவர்கள் இரசாயனவியல் பயிலுகின்றனர்?
(1) 120 (2) 140 (3) 180 (4) 200 (5) 260

45. இவ்வினாவில் 1 இனாலும் 7 இனாலும் குறிப்பிடப்படும் இரு வாக்கியங்களுக்கிடையே உள்ள *A, B, C, D, E* ஆகிய வாக்கியங்கள் சரியான வரிசையில் **தரப்படவில்லை**. அந்த ஏழு வாக்கியங்களும் ஒரு தருக்கத் தொடரியில் அமைவதற்கு அவற்றின் பொருத்தமான ஒழுங்கமைப்பைத் தெரிந்தெடுக்க.

1 – சுப வேளையில் தலைக்கு எண்ணெய் தேய்த்தலும் பின்னர் நீராடுதலும் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் முக்கியமான ஓர் அங்கமாகக் கருதப்படுகிறது.

A – கண்ணைக் கட்டிக் கொண்டு, நீர் நிரம்பிய முட்டியை உடைத்தல் என்பது புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது இடம்பெறும் ஒரு விநோதமான நிகழ்வாகும்.

B – சமய வழிபாட்டுத்தளமொன்றுக்குச் செல்வது மிக முக்கியமான ஒரு நிகழ்வாகும்.

C – நாளுக்குரிய நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின் பிரதம அதிதியின் பேச்சும் பரிசளிப்பும் இடம்பெறும்.

D – சமய வழிப்பாட்டுத்தலத்தில் பிரதான பூசகர் அனைவரையும் ஆசீர்வதிப்பார்.

E – இறுதியான விளையாட்டு நிகழ்ச்சியாக திருமணமாகாத - திருமணமாகிய பெண்களின் கயிறிழுத்தல் போட்டி மிகச் சுவாரசியமான ஒன்றாகும்.

7 – புத்தாண்டுக் கொண்டாட்ட இரவில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள் பொதுவாக கிராமப் பிள்ளைகளினால் முன்வைக்கும் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமாகும்.

(1) *B, D, A, E, C* (2) *B, D, E, A, C* (3) *B, E, A, D, C*
(4) *D, B, A, E, C* (5) *D, B, E, A, C*

46. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு *A, B, C, D, E* பகுதியும் மூன்று கூற்றுகளைக் கொண்டவை. இவற்றுள் எந்தப் பகுதியில் அடங்கியுள்ள கூற்றுகளை பொருளுள்ள ஓர் ஒழுங்கின்படி வரிசைப்படுத்தலாம்?

A *(a)* அரச விதை நெல் ஆராய்ச்சி நிலையம் குருணாகலின் பத்தளகொடையில் அமைந்துள்ளது.

(b) பாரம்பரியமான நெல் இனங்களை அறுவடை செய்வதற்கு ஏறத்தாழ 4 மாதங்கள் செல்லும்.

(c) பத்தளகொடையில் உற்பத்தி செய்யப்படும் BG 300 நெல் இனத்தினை அறுவடை செய்ய ஏறத்தாழ 3 மாதங்கள் செல்லும்.

B *(a)* கல்வி என்பது ஓர் அடிப்படைத் தேவை மட்டுமன்றி தனிநபரின் உரிமையும் ஆகும்.

(b) பாடசாலைக் கல்வியின் பிரதான குறிக்கோள்களுள் (i) நல்லொழுக்கமுள்ள ஒருவரை உருவாக்குதல் (ii) உறுதியான ஆளுமையைக் கட்டியெழுப்புதல் (iii) எதிர்கால தொழிற்சந்தைக்கு தொழில்வாண்மையாளரைத் தயார்படுத்தல் ஆகியன அடங்கும்.

(c) பாடசாலைக் கல்வியின் இதயமாக அமைவது ஆசிரியர்களாவர்.

C *(a)* மின் துண்டிப்பு தொடர்பாக வீட்டில் வசிப்பவர் தொலைபேசி மூலம் மின்சார சபைக்கு அறிவித்தார்.

(b) இரவு 9.00 மணியளவில் ஒரு வீட்டில் மின்சாரத் துண்டிப்பு ஏற்பட்டது.

(c) நாடு முழுவதிலும் மின் துண்டிக்கப்பட்டுள்ளது எனவும், அது இன்று இரவு 10.00 மணியளவில் இயல்பு நிலைக்கு வரும் எனவும் மின்சார சபை அதிகாரி ஒருவர் அறிவித்தார்.

D *(a)* ஒரு புரொயிலர் வகைக் கோழி எதிர்பார்க்கப்படும் நிறை அளவை அடைவதற்கு இரண்டு மாத காலம் செல்லும்.

(b) தாய்க் கோழியினால் அல்லது அடைபொறியினால் முட்டைகளை அடைகாப்பதற்கு மூன்று வார காலம் செல்லும்.

(c) முட்டைக் கோழிகள் முட்டையிட ஆரம்பிக்கும் காலம் அண்ணளவாக $3\frac{1}{2}$ மாதங்கள் ஆகும்.


E *(a)* பரவலாக நுகரப்படும் மூன்று பழவகைகளாவன வாழை, மா, பலா ஆகியன ஆகும்.

(b) இலங்கையில் பொது உணவாக நுகரப்படும் உணவு சோறும் கறியும் ஆகும்.


(c) புரதம் தரும் இரண்டு மூலங்களாக முட்டையும் பாலும் பொதுவாக விதந்துரைக்கப்பட்டுள்ளன.

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*

47. படங்களில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வைக் கருதுங்கள்.




A




B




C



D



E



F

நிகழ்வின் சரியாக ஒழுங்கைக் காட்டும் வகையில் படங்களை ஒழுங்கு செய்வதனால் கிடைக்கும் வரிசை பின்வருவனவற்றுள் எது?

(1) *B, A, D, E, C, F* (2) *B, A, D, E, F, C* (3) *B, E, D, A, C, F*

(4) *B, E, D, A, F, C* (5) *E, D, A, B, C, F*

CamScanner

- இல. **48** தொடக்கம் **50** வரையிலான வினாக்கள் குடும்ப உறுப்பினர்களான சிறிதர் என்னும் தந்தை, கமலா என்னும் தாய் என்பவர்களுக்கிடையே அவர்களின் ஒரு மகளாகிய சாந்தினியினது பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றுவது தொடர்பாக இடம்பெற்ற உரையாடலை அடிப்படையாகக் கொண்டவை. சாந்தினியின் தோழியான அனுஷாவும் பட்டமளிப்பு விழாவிற்குச் செல்லும் பயணத்தில் சேர்ந்து கொள்கிறாள். அவர்களுக்கு இடையே நிகழும் இந்த உரையாடல் *A* தொடக்கம் *M* வரையிலான பகுதிகளைக் கொண்டதாயினும் அப்பகுதிகள் உரையாடலில் இடம்பெற்ற ஒழுங்கின்படி இங்கு **தரப்படவில்லை.**

A : அப்பா, வேன் ஒன்றை வாடகைக்கு அமர்த்துவது பற்றிய உங்களது உரையாடல் எனது காதுகளில் கேட்டது. ஆனாலும் எமது குழு நண்பிகள் சிலர் வாகனமொன்றினை வாடகைக்கு அமர்த்த தீர்மானித்துள்ளனர். எப்படி இருந்தாலும் நீங்கள் உங்களது திட்டத்துடனேயே இருங்கள் அப்பா.

B : எங்களுடன் பட்டமளிப்பு விழாவிற்கு செல்வதற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

C : மாமா, மாமி, உங்களுடன் விழாவில் பங்குபற்றக் கிடைத்தது குறித்து நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

D : ஆம். கமலா, 10 பேர் அளவில் எங்களோடு செல்ல வருவார்கள்.

E : சிறிதர், எமக்கு மகளின் பட்டமளிப்பு விழாவிற்குப் போக வான் ஒன்று வாடகைக்குப் பெறவேண்டியுள்ளது.

F : நானும் குழுப் புகைப்படத்தில் சேர்ந்து கொள்ளட்டுமா?

G : ஊர்வலத்தைப் பாருங்கள். நாங்கள் அதில் சாந்தினியைப் பார்ப்பது எவ்வளவு பெருமையாக இருக்கிறது.

H : விழா முடிந்த பின்பு நாங்கள் தனியாகவும் குழுவாகவும் சில புகைப்படங்களை எடுப்போம்.

I : சிறிதர், வாகனத்தில் செல்பவர்களின் விருப்பம் தொடர்பாக எதற்கும் சாந்தினியுடன் கதைப்பது நல்லது.

J : சிறிதர், வாகனத்தில் இடம் உள்ளதாயின், அனுஷாவும் எங்களுடன் விழாவிற்கு செல்ல விருப்பத்துடன் இருக்கிறாள். நாம் அவளையும் கூட்டிச் செல்வோம்.

K : ஆம். அது நல்ல அழகாக இருக்கும்.

L : சரி கமலா. நான் அவளுடன் கதைக்கின்றேன்.

M : கமலா, எங்கள் மகள் அவரது குழுவுடன் வேறாகப் பயணம் செய்வாள். நாங்கள் வேறாகப் போவோம்.

48. தாய்க்கும் தந்தைக்கும் இடையிலான உரையாடலினைச் சரியாகக் காட்டும் தெரிவு எது?

(1) *E, D, I, L, M, J* (2) *E, D, M, J, I, L* (3) *E, D, M, J, L, I*
(4) *I, L, E, D, J, M* (5) *I, L, E, D, M, J*

49. அனுஷாவுக்கும் சிறிதருக்கும் இடையிலான உரையாடலைச் சரியாகக் காட்டும் தெரிவு எது?

(1) *C, B, F, K, G, H* (2) *C, B, G, H, F, K* (3) *F, K, G, H, C, B*
(4) *G, H, C, B, F, K* (5) *G, H, F, K, C, B*

50. ஒட்டுமொத்த உரையாடலின் உண்மையான ஒழுங்குமுறை வரிசை பின்வருவனவற்றுள் எது?

(1) *E, D, I, L, A, M, J, C, B, G, H, F, K*
(2) *E, D, I, L, A, M, J, G, H, F, K, C, B*
(3) *E, D, M, J, I, L, A, C, B, F, K, G, H*
(4) *E, D, M, J, I, L, A, G, H, F, K, C, B*
(5) *I, E, D, L, M, J, A, C, B, F, K, G, H*

* * *

CamScanner